ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராயநம:

ஆர்யதர்மம்.

नलिनीदलगतजलमतितरलं तद्वज्जीवितमतिशय चपलम् ।
विद्धि व्याध्यभिमानग्रस्तं लोकं शोकहतं च समस्तम् ॥

नलिनीदलगतजलं - தாமரை இலையையடைந்த நீரானது
अतितरलं - மிகவும் சஞ்சலமுள்ளது
तद्वत् - அவ்விதமே
जीवितं - பிராணன்
अतिशयचपलं - அத்தியந்தம் நிலையற்றது
समस्तं - ஸகலமான
लोकं - லோகங்களையும்
व्याध्यभिमानग्रस्तं - வியாதிகளாலும் அகங்காரத்தாலும் பீடிக்கப்பட்டவைகளாகவும்
शोकहतं - துக்கத்தால் அடிக்கப்பட்டவைகளாயும்
विद्धि - அறி.

பால்யகாலத்திலும் யௌவனவயதிலும் கவனிக்கவேண்டிய விஷயங்களை விட்டு அதிகவயதுசென்றபிறகு காலாந்திரத்தில் செய்யவேண்டிய தத்வவிசாரணையை இப்பொழுதே எதற்காகச் செய்யவேண்டுமென்று சங்கிப்பது சரியல்லவென்று கூறுகின்றார்.

தாமரை இலையில் இருக்கும் நீரானது எங்ஙனம் நிலைபெறாமல் மிகவும் சஞ்சலத்துடனிருக்குமோ அங்ஙனமே நமதுபிராணவாயுவும் ஒரு க்ஷணங்கூட ஸ்திரமாயிராமல் சலித்துக்கொண்டிருக்கும் ஸ்வபாவமுள்ளது. இவ்விதம் சலனமுள்ளதாயும் அடுத்த க்ஷணத்தில் நாசத்தையடையக்கூடியதுமான இந்த ஜீவனை இவ்வளவுகாலம் நிச்சயமாயிருக்குமென்பதை எவரும் தீர்மானிக்க முடியாது. இதர லோகங்களின் நிலைமையைப்பற்றி விசாரிக்க வேண்டாம். அவைகளும் இவ்விதமே. வியாதிகளாலும் அகங்காரத்தாலும் கிரகிக்கப்பட்டவைகளாய்க்கொண்டு துக்கத்தால் பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒன்றையும் நாம ஸ்திரமாக நம்பமுடியாமலிருப்பதால் இப்பொழுதே நித்யமான ஆத்மஸ்வரூபத்தை அறிய எத்தனிக்கவேண்டியது முக்கியம்.

ஸ்ரீ வியாஸபூஜா மஹோத்ஸவம்.

ஸ்ரீ வியாஸபூஜை என்கிற இந்த ஆராதனத்தை மடாதிபதிகளான லோகாசார்யாளும், மற்றுமுள்ள ஸன்யாஸிகளும் ஒவ்வோராண்டிலும் நடத்திக்கொண்டு வருகிறார்கள். இது எதற்காகச் செய்கிறது? (1) எப்பொழுது செய்கிறது? (2) இதல் என்ன செய்கிறது? (3) இதற்கு வியாஸபூஜை என்று பெயர் ஏற்படுவதற்கு யாது காரணம்? (4) இந்தப் பூஜை ஆன பிறகு, இரண்டு மாத காலம் ஒரே ஸ்தலத்தில் என் தாமதிக்கவேண்டும். (5) என்பவை போன்ற தங்களுக்கு நிகழும் சங்கைகளுக்கு நம் ஆர்யதர்ம முகமாக விடை பகர்ந்து தங்கள் சங்கையைப் போக்க வேண்டுமென்கிற ஆர்யதர்மாபிமானிகளான சில நண்பர்களின் விக்ஞாபனத்திற்கிணங்கி என் சிற்றறிவிற்றோன்றிய சில விஷயங்களை அறிவிக்க முன் வருகின்றேன்.

1. இது எதற்காகச் செய்கிறது?

இங்கு இவ்விதம் சங்கிக்கும் ஸாமான்ய ஜனங்களின் கருத்தாவது, மிகவும் சிறந்ததான ஸந்யாஸமென்கிற பரமஹம்ஸாச்ரமத்தைப் பெற்ற மகான்களுக்குப் பிர்மசர்யம் முதலிய ஆச்ரமங்களிலிருப்பவர்களுக்குப் போல கர்மாக்களில் அதிகாரமில்லை, என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றபடியால் எதற்காக இவர்கள் இந்தக் கர்மாவைச் செய்யவேண்டுமென்பதேயாகும்.

இதர ஆச்ரமத்திலிருப்பவர்களுக்குப் போல் இவர்களுக்குக் கர்மாவைச் செய்யவேண்டுமென்கிற நிர்பந்தமில்லை என்பதுண்மையே. ஆனாலும் திருடமான வைராக்கியம் ஏற்பட்டு ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பெறுவதற்குத் தகுதியான சிறந்த ஞானத்,

தையடைய வேண்டி, யதிகளும் இந்தப் பூஜையை செய்ய வேண்டும்.

वपनानन्तरं स्नात्वा पूजयेत्पुरुषोत्तममिति ।

ஸன்யாஸிகள் க்ஷௌரவம் செய்து கொண்டு விதிப்படி ஸ்நானம் செய்து விட்டு வியாஸர் முதலான பெரியோர்களைப் பூஜிக்க வேண்டுமென்று, அத்திரிமஹரிஷியால் வைத்யநாத தீக்ஷிதீய வர்ணாச்ரம காண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அவ்விடத்திலேயே,

तस्माद्ध्यानरतो नित्यमात्मविद्यापरायणः ।
ज्ञानं समभ्यसेद्ब्रह्म येन मुच्येत बन्धनात् ॥

என்று ஞானாபிவிருத்தியை அவச்யம் செய்ய வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஞானாபிவிருத்தியை யுத்தேசித்து இந்தப்பூஜையை, யதிகள் அனுஷ்டிக்கவேண்டுமென்று சாஸ்திரம் கருதுகின்றது.

2. எப்பொழுது செய்கின்றது.

ஆஷாட சுத்த பௌர்ணமி (அதாவது ஆனி மாஸத்திய அமைக்குப் பிறகு வரும் பௌர்ணமியாகும்) அந்த தினத்தைத் தான் இதற்கு முக்யகாலமாகக் கூறியிருக்கிறார்கள். அந்தப் பௌர்ணமியில் நடத்த ஏதாகிலும் அஸௌகர்யம் நேர்ந்தால் அந்தப் பௌர்ணமியிலிருந்தும் பஞ்சமி வரையில் அனுஷ்டிக்கலாமென்று கௌணகாலமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேற்பட்டால் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லியிருப்பதால் அதிக்கிரமிக்காமல் கீழ்க்காட்டிய இரண்டு காலங்களில் ஒரு காலத்தில் அவசியம் இதை அனுஷ்டிக்கவேண்டும்.

இக்கருத்தையே

अनेन विधिना भिक्षुराषाढ्यां सुसमाहितः ।
स्थानाभावाद्व्रजेत्तावद्यावद्भवति पञ्चमी ॥
प्रायश्चित्तेन युज्येत पञ्चम्यूर्ध्वं व्रजेद्यदि ॥

என்று சாஸ்திரமும் வெளியிடுகின்றது.

3. இதில் என்ன செய்கிறது.

அவரவர்களின் குரு பரம்பரைகளையும் பிர்மா விஷ்ணு முதலான தேவதைகளையும், வியாஸர், வஸிஷ்டர், சுகர், ஸநத் குமார் ஸனகர், ஸனந்தனர், வைசம்பாயனர் முதலான மஹர்ஷிகளையும் ஒவ்வொருவரையும் விதிப்படி போடப்பட்ட பூஜாமேடையில் அந்தந்தஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கும் எலுமிச்சம்பழங்களிற் ப்ரத்யேகமாய் ஆவாஹனம் செய்து ஒவ்வொருவருக்கும் சாஸ்திரத்தில் சொல்லியபடி தூபம், தீபம், நிவேதனம் முதலான ஆராதனங்களால் நன்கு பூஜை செய்கிறது.

இவ்விதமே

देवं कृष्णं मुनिं व्यासं भाष्यकारं गुरोर्गुरुम् ।
गुरुं देवगणाध्यक्षौ दुर्गां देवीं सरस्वतीम् ॥

तत्र मध्ये कृष्ण सनत्कुमार सनक सनन्दन सनत्सुजातान् तद्दक्षिणतो व्यास सुमन्तु जैमिनिवैशम्पायनपैलान् वामतो भाष्यकारपद्मपाद विश्वरूपतोटकहस्तामलकाचार्यांश्च पूजयेत् । गुरु परमगुरु परमेष्ठीगुरुप्रमुखानाचार्यानपि पूजयेत् । इति यतिधर्मसमुच्चये ॥

யதி தர்ம ஸமுச்சயமென்கிற கிரந்தத்தில் விஸ்தாரமாய் கூறப்பட்டிருக்கின்றது. இதனால் வியாஸபூஜை என்றால் தேவ, குரு, ரிஷி முதலான பெரியோர்களுக்குச் செய்யப்படும் பூஜை என்று பொருள் ஏற்படுகின்றது.

4. இதற்கு வியாஸபூஜை என்று பெயர் ஏற்படுவதற்கு யாது காரணம்?

சிவபூஜை அல்லது விஷ்ணு பூஜை அல்லது ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய பூஜைஎன்று தேவதைகளில் முக்கியமானவருடைய பெயரையாவது ஆசார்யர்களுக்குள் முக்கியமான ஸ்ரீ சங்கருடைய பெயரையாவது கொண்டு இப்பெயர் ஏன் ஏற்படக்கூடாதென்று வினவுவோரின் கருததெனத் தெரிகின்றது.

பூர்வாசார்யர்களுக்குள் ஒருவருடைய பெயரை முன்னிட்டு இப்பெயர் வழங்குவது உசிதமென்றும், அதிலும் பிரஸித்தான

ஸ்ரீ சங்கராசார்யருடைய பெயரை முன்னிட்டு இருந்தால் உசிதமாயிருக்குமென்று பூர்வ பக்ஷி கருதுகிறுர்.

வியாஸபூஜை என்கிற இப்பெயரும் புர்வாசார்யாளுக்குள் சிறந்தவரான வியாஸமஹரிஷியின் பெயரை முன்னிட்டே ஏற்பட்டிருக்கிறது. நம் பூர்வ பக்ஷி எவர்களைப் பெரியார்ளெனக் கொள்கிறுர்களோ அந்த ஸ்ரீ சங்கராசார்யாளுக்கும் இந்த வியாஸர் குரு பரம்பரையில் முந்தியவராயும் உபாஸிக்கத் தகுந்தவராயுமாகிறுர். ஆகையால், நம் பூர்வபக்ஷி வியாஸரை குருபரம்பரையிற் சிறந்தவரல்லவென்றும் அதிகப் பிரசித்திபெற்றவரல்லவென்றும் கருதுவதால் அவருடைய மகிமைக்கற்பமெனும் குறை வேற்படாது. ஆகையால் அம்மஹானுடைய பெயரை முன்னிட்டு வியாஸபூஜை என்கிற இப்பெயூரால் வழங்குவது சாலவும் நலமேயாகும்

பின்னும்.

व्यस्तवेदतया व्यास इति लोके श्रुतो मुनिः ।

லோக க்ஷேமார்த்தம் அவதரித்த மஹான்கள் பலரிருப்பினும் அவர்களுக்குள் வியாஸபகவானே மிகவும் சிறந்தவர் விஷயங்களை சுலபமாயறியமுடியாமல் ஏகரூபமாய்ச்சேர்ந்திருந்த வேதங்களைப் பிரித்ததினுலும்

अष्टादशपुराणानां कर्ता सत्यवतीसुतः ।

என்று சான்றோர் சாற்றியபடி ஸகல புராணங்களையுமியற்றியதாலும், பிறரால் செய்யப்படாத மிகவும் பெரிதான உபகாரத்தைச் செய்திருக்கிறுர். மேலும், ஸந்யாஸிகளுக்கு ஸம்ஸாரபந்தத்தை அடியோடகற்றி உத்தமமான ஸ்வஸ்வரூபத்தையடைவதற்கு முக்கியஸாதனமான வேதாந்த ஸூத்திரங்களை இயற்றியவரும் இம்மஹானே. இவைகளால் சகலஆச்ரமிகளுக்கும் அழிவில்லாத நித்யமான ஸுகத்தைப் பெறுவதற்கு முக்கியமான ஸாதனத்தை அறிவித்தவர் வியாஸரென்கிற இம்மஹானுகையால் இவரே ஆசார்யர்களுக்குள் முக்கியமானவர் என்பதையும் வெளியிட வேண்டி அவருடைய பெயரையே முந்தி ஸ்மரிக்கவேண்டுமென்றும் கருதி வியாஸபூஜை என்று அவர் பெயரை முன்னிட்டு இப்பெயர் கூறப்பட்டிருக்கின்றதும் உசிதம்தான்.

5. இந்தப் பூஜையான பிறகு இரண்டு மூன்று மாதங்கள் ஒரே இடத்தில் என் வஸிக்க வேண்டும்.

ஆஷாட சுத்த பௌர்ணமியில் இந்தப் பூஜை நடத்தவேண்டுமென்று விதியிருப்பதால் அதை அனுஸரித்துப் பூஜையை நடத்துகிறார்கள். அந்த ஸமயம் வர்ஷாகாலமும் வருகின்றது. கிரீஷ்ம ருதுவில் அதிக தாபத்தால் பிராணிகள் யாவும் பூமிக்குள் வஸித்துக் கொண்டிருக்கும் வர்ஷாகாலத்தில் பூமி குளிர்ச்சியாயிருப்பதால் வெளியில் ஸஞ்சரிக்கவரும் ஸமயம். அக்காலத்தில் இவர்களும் பாதசாரியாய் வெளியில் சென்றால் அந்தப் பிராணிகளுக்குஹிம்ஸை நேருமென்று கருதி இரண்டு மாதம் அதிக ஸஞ்சாரமில்லாமல் ஒரே இடத்தில் இருக்கவேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவைகளின் அபிப்பிராயத்தைக் கொண்டு தான் பூஜை முடிந்த பிறகு அங்கு வந்திருக்கும் கிருகஸ்தர்களைப் பார்த்து ஸந்யாஸிகள்

प्रायेण प्रावृषि प्राणिसंकुलं वर्त्म दृश्यते ।
अतस्तेषामहिंसार्थं पक्षा वै श्रुतिचोदनात् ॥
स्थास्यामश्चतुरो मासानत्रैवासति बाधके ॥

வருஷாகாலம் வருகிறபடியால் மார்க்கத்தில் ஸஞ்சரிக்கும் பலபிராணிகள் காணப்படுகின்றன. நாங்கள் ஸஞ்சரிப்பதால் அவைகளுக்கு ஹிம்ஸை எற்படாமலிருக்க வேண்டி வேதத்தில் கூறியபடி நாலு பக்ஷங்களை அதாவது இரண்டு மாதகாலம் உங்களுக்கு பாதகமில்லாமலிருந்தால் இந்த ஸ்தலத்திலே வஸிக்கிறோம், என்று கேட்கிறார்கள்.

இவ்விதம் கேட்கும் ஸந்நியாஸிகளைப்பார்த்து கிரகஸ்தர்கள்

निवसन्तु सुखेनात्र गमिष्यामः कृतार्थताम् ।
यथाशक्ति च शुश्रूषां करिष्यामो वयं मुदा ॥

தாங்கள் இவ்விடத்திலேயே சுகமாக வஸிக்கவேண்டும் தங்களுடைய வாஸத்தால் நாங்களும் தந்யர்களாகின்றோம். நாங்கள்

எங்கள் சக்தியையனுஸரித்து ஸந்தோஷமாக சுச்ரூஷை செய்கிறோம் என்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறார்கள். இவர்கள் பிரார்த்தனைக்கும் சாஸ்திரவிதிக்கும் கட்டுப்பட்டு தாமசிக்கிறார்களேயல்லாமல் வேறு விதமல்ல.

இவ்வித மஹிமை பொருந்திய இந்த வியாஸபூஜா மஹோத்ஸவத்தை கும்பகோணம் ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகளவர்கள் இந்த வருஷம் காட்டு மன்னார் கோவில் க்ஷேத்திரத்தில் வெகு விமர்சையாய் நடத்தி ஸகல ஜனங்களையும் அனுக்கிரகித்தார்கள்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்,

காட்டுமன்னார் கோவிலில் கும்பகோணம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்

வியாஸபூஜா மஹோத்ஸவம்.

இவ்வருஷம் வியாஸபூஜா மஹோத்ஸவம் இவ்வூரில் நடக்கும்படி ஏற்பட்டது வைணவாசார்யர்கள் அவதரித்த இக்கிராமத்தின் பெரும் பாக்கியமே! வியாஸபூஜைக்கு முதல்தினம் (24—7—29) மாலை 5 மணிக்கே உள்ளூர் மஹாஜனங்கள் மேளவாத்திய சத்ர சாமர பூர்ணகும்பங்களுடன் பரம குதூஹலத்துடன் புறப்பட்டு சுமார் ஒரு மயில் தெற்கிலுள்ள “ராஜேந்திர சோழகன்” எனும் கிராமத்தில் வந்து பண்டித மண்டல மத்தியத்தில் விளங்கும் ஸ்ரீ பரமஹம்ஸாசார்யாளை உபநிஷத் பாராயணத்துடன் பூர்ணகும்பம் ஸமர்ப்பித்து வந்தன பூர்வகமாகப் பிரார்த்தித்தனர்.

பரமேசுவராவதார பூதாளான ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகள் அங்கிருந்தும் சிபிகையில் அமர்ந்து பக்த ஜனங்களை அனுக்கிரஹிக்கும் பரிபூரண கடாக்ஷத்துடன் இருபுறங்களிலும் பங்க்தி

யாய் குதூஹலத்துடன் ஆரவாரம் செய்யும் சிஷ்ய ஜனங்கள்சூழ 9மணிக்கு இவ்வூரில் ஸ்ரீவீரநாராயணப் பெருமாள் ஸன்னதிவீதியில் ஸ்ரீ மடத்திற்காக ஏற்படுத்தியுள்ள ஜாகையில்இறங்கி மங்களஹாரத்தி கற்பூரதீபாராதனை முதலிய ஆராதனங்கள் ஆனவுடன் கைலயங்கிரிபோன்ற வெள்ளிச் சிம்மாசனத்தில் அமர்ந்தனர். உடனே அடியில் கையொப்பமிட்டவரால் ஸ்வாகத பத்திரிகை வாசித்து ஸமர்ப்பிக்கப்பட்டது. அதைச் செவியுற்ற மஹாஸ்வாமிகள், ஸம்ஸ்கிருதமயமான தமது திருவாக்கால் "எல்லோருக்கும் மங்களமுண்டாகட்டுமென்பதே தமதுகோரிக்கை" என்று அருள் புரிந்தார். பிறகு மதுரை எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகளால் இனிய தன் சொன்மாரியால் தக்ஷிணாமூர்த்தி ரூபமாயிருந்த முக்கண்ணன் வடமூலத்தையும், மௌன முத்திரையையும்விட்டு அக்ஞான கூபத்தில் விழுந்து கஷ்டப்படும் குழந்தைகளை கரையேற்றுவிப்பதற்காக இம்மாதிரி ஸ்ரீ சங்கராசார்ய ரூபமாய் ஸஞ்சரிக்கிறார் எனும் கருத்துள்ள ஓர் உபன்யாஸம் சுமார் அரைமணி நேரம் செய்யப்பட்டது. அதன் பிறகு எல்லாஜனங்களுக்கும் பிரஸாதம் கொடுத்து அனுக்கிரகித்தார்கள்.

வியாஸ பூர்ணிமையான மறு நாள் காலை வேளையில் வியாஸ பூஜைக்குப் பூர்வாங்கமான கார்யங்களை நடத்த யத்தனிக்கும் ஸமயத்தில் மைசூர்மஹாராஜா அவர்களால் காணிக்கையாக அனுப்பப்பட்ட மிக லக்ஷணம் பொருந்திய "க்ஷமா" என்று பெயர் வாய்ந்த பதின்மூன்று வயதுள்ள கஜசிரேஷ்டையானது வந்து சேர்ந்தது. சுபமுகூர்த்தமான அதே வேளையில் மஹாஸ்வாமிகளவர்கள் அதை அங்கீகரித்துக்கொண்டு பூஜிக்கச்செய்து தம்திருக்கையாலேயே அந்த யானைக்கு மாலையும் சூட்டினார்கள்.

இந்த பூஜைக்காக அநேக தேசங்களிலிருந்து பல ஜனங்கள் வந்திருந்தனர். மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸ்பால் மஹாமஹோபாத்தியாய பிரமமஸ்ரீ வெங்கிடுசுப்பா சாஸ்திரிகள், சித்தூர் காலேஜ் பிரின்ஸ்பால் பிரம்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள், ஜம்புகேச்வரம் ஸ்ரீ மடம் வேதாந்த வித்யாசாலை

உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள், ஆர்யதர்மம் பத்திராதிபர் பிரம்மஸ்ரீ வெங்கிட்டராம சாஸ்திரிகள், ஷை உபபத்திராதிபர் பிரம்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள், மதுரை M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள், மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் அவர்கள், திருச்சி வக்கீல் ஜெயராமய்யர் அவர்கள், மதுரை வக்கீல் சுந்தரமய்யர் அவர்கள் திருச்சி குருபக்த சிகாமணி கந்தசாமி சேர்வை அவர்கள் உள்ளூர் முத்துக்குமரபிள்ளை அவர்கள், முதலான அநேக பண்டிதர்களும், பிரபுக்களும், பக்தர்களும் வந்திருந்தனர். பூஜைக்காக வேதபுஷ்கரணி தீர்த்தக்கரையிலுள்ள ஜபமண்டபத்தில் பந்தல்போட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. பகல் 10 மணி சுமாருக்கு பூஜோபகரணங்களுடன் பூஜை ஆரம்பித்தவுடன் வழக்கம்போல் காஞ்சீபுரம், தஞ்சாவூர், ஜம்புகேசுவரம், மதுரை, ஆளுடையார்கோவில் புதுக்கோட்டை, லால்குடி உடையார்பாளையம், முதலான தேவஸ்தானங்களினின்றும் ராஜஸ்தானங்களினின்றும் பிரஸாதங்களும் காணிக்கைகளும் யானையின்பேரில் வைத்து மேள வாத்யத்துடன் அந்தந்த ஸ்தானங்ளிலுள்ள அதிகாரிகளால் கொண்டுவந்து ஸமர்ப்பணம் செய்யப்பட்டன.

இந்த சமயத்தில் குருபக்த சிகாமணி திருச்சி கந்தஸாமிசேர்வை அவர்கள் பூஜாதிரவியங்களும் பாதார்ச்சனைகாணிக்கையும்பிரமண சந்தர்ப்பணைக்கு வேண்டிய ஸகல பதார்த்தங்களையும் ஸ்ரீ குருசரணாரவிந்தங்களில் ஸமர்ப்பித்து தரிசித்து ஆசாரியாள் அநுக்கிரஹத்துக்குப் பாத்திரமானார்கள்.

மேற்கண்ட வைபவங்களுடன் ஸ்ரீவியாஸபூஜை ஆரம்பித்து வெகு விமரிசையாய் நடத்தி பக்தகோடிகளான உள்ளூர் வெளியூர் மஹாஜனங்களுக்கெல்லாம் ஸ்ரீ சந்திரமௌளீசுவரப் பிரஸாதமும் வியாஸாக்ஷதையும் கொடுத்து அருள் புரிந்து, பிறகுசந்திரமௌளீசுவர பூஜா கிருஹம் வந்து வழக்கம் போல் ஸ்ரீ சந்திரமௌளீசுவரரை ஆராதித்து பிரஸாதமும் தீர்த்தமும் கொடுக்கப்பெற்ற ஜனங்களுக்குள் பிராமணர் அனைவரும் திருச்சி சேர்வையின் பக்தியால் சித்தம் செய்விக்கப்பட்டுள்ள பக்ஷ்யபோஜ்யங்களுடன் கூடிய சிறந்த போஜனத்தை உண்டு களித்தனர். அன்று முதல் காலை மாலைகளில் வித்வத்ஸதஸ்ஸும், பண்டிதர்களின் வாக்கியார்த்தங்களும் ஸம்மானங்களும் நடந்து வருகின்றன. ஸ்ரீ மஹாஸ்வாமிகளை இச்சமயம் தர்சனம் செய்ய ஓர் சிறந்த புண்ணி

யகாலமாகும். அநேக வருஷ காலமாக ஸ்ரீ ஸ்வாமிகளவர்களேயும் அவர்களுடைய திவ்யமஹிமைகளேயும் பலமுறை கேட்டு நேரில் அவர்கள் விஜயம் செய்து இருக்கும் இடம் சென்று தர்சித்து அனுக்கிரகப் பிரஸாதத்தைப் பெறும் பாக்கியம் நமக்குக்கிட்டவி ல்லேயே என்று மிகவும் கவலேயுடனிருந்த இந்தப் பிராந்தியங்களி லுள்ள பல ஜனங்களின் பூர்வ புண்ணியங்களால் இதர கிராமங்க ளிலுள்ள பல ஜனங்களால் எங்கள் கிராமத்துக்கு விஜயம் செய்து அங்கு இந்த பூஜாமஹோத்ஸவத்தை நடத்தி எங்களே தன்யர்க ளாகச் செய்யவேண்டுமெனப் பிரார்த்திக்கப்பட்டும் அவர்களுக்கு கிடைக்காமல் இந்த கிராமத்திற்கு ஸ்ரீ குருசரணுளுடைய விஜ யமும் சாதுர்மாஸ்ய மஹாபூஜா ஸங்கற்பமும் பிறகும் இரண்டு மாதகாலம் வரை இந்த ஊரிலேயே ஸ்ரீ சந்திரமௌளீசுவராரா தனமும் நேர்ந்த விஷயத்தில் இங்குள்ள மஹாஜனங்களும் மற் றும் வெளியூரிலிருந்து வரும் ஜனங்களும் ஆனந்தக் கடலில்அமி ழ்ந்து ஸ்ரீஆசார்யாளுடைய அனுக்கிரஹத்தாலும் ஸ்ரீசந்திரமௌ ளீசுவர ஸேவையாலும் ஜன்மஸாபல்யத்தையும் அடைகிறுர்கள்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் காட்டுமன்னூர் கோவிலில் வியாஸ பூஜைக்காக விஜயம் செய்திருந்த பொழுது பக்தி புரஸ்ஸரமாய் ஸமர்ப்பிக்கப்பட்ட

நல்வரவு பத்திரிகை.

संसेव्यं द्रुहिणादिदेवनिकरैः श्रीवीरनारायणं
त्रिल्वारण्यनिवासिनं च गिरिशं संपूजनायागतम् ।
लोकत्राणपरायणं नृवपुषं लोकत्रयाधीश्वरं
दृष्ट्वा लोकगुरुं नतिर्वितनुते ह्येतत्पुरस्थो जनः ॥१॥

பிர்ம்மாதி தேவர்களால் பூஜிக்கப்பட்டு, வீரநாராயணன் என்று இவ்வூரில் அர்ச்சாரூபியாய் விளங்கும் விஷ்ணுவையும், பில்வாரண்ய மெனும் இதற்கடுத்த வடபாகத்தில் (உடையார்குடி) லிங்கரூபியாய் பிரகாசிக்கும் பரமேசுவரனையும், அர்ச்சிப்பதற்கு மனுஷ்யாகாரமாய் வந்தவரும், மூவுலகையும் கார்க்கும் விரதம் பூண்டவருமான, லோக குருவைக்கண்டு இந்நகரிலுள்ள எல்லா மனிதரும் வணங்குகின்றனர்.

यदीयं हृत्पद्मं निगमवचनान्तैकनिरतं
गिरामप्यासारो भवजलधिसन्तारणतरिः ।
सुगात्रंचान्येषामघनिरसने बद्धकुतुकं
प्रणौम्यत्र प्राप्तं गुरुवरमहं शाङ्करमिमम् ॥२॥

வேதாந்த விசாரத்திலேயே ஆழ்ந்த மனதுள்ளவரும் ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றும் கப்பல் போன்ற நாவலிமையுள்ளவரும், இதரர்படும் கஷ்டத்தை ச்சகியா, யாக்கையுள்ளவருமான, இங்கு வந்து விஜயம் செய்யும் ஸ்ரீ சங்காகுரு சிரேஷ்டரை நான் வணங்குகிறேன்.

यो हत्वा भुवि तानधर्मनिवहान् संवर्धितान्सर्वतो
लोकान्पालयितुं कृतोद्यमतमः क्षेत्राटनव्याजतः ।
क्षेत्रेऽस्मिन्मुनिपूजिते च महिते दैवात्समभ्यागतं
तं वन्दे रजताचलाग्रनिलयं श्रीशङ्करं देशिकम् ॥३॥

துர்மதங்களால் உலகம் சீர்கெட்டிருந்த பொழுது ஆதிசங்கரர் அவதரித்தது போல், இப்பொழுது ஆங்காங்கு தர்மம் குன்றி அதர்மம் பரவியிருந்ததை ஒழிக்கவேண்டி, க்ஷேத்திராடனம் என்றும் அபதேசத்தால் தர்மத்தை நிலையுறச் செய்துகொண்டு மதங்க மகர்ஷியால் தவம் செய்யப்பட்ட இந்து நகரத்துக்கு அதிர்ஷ்டவசத்தால் ஸாந்நித்தியம் செய்கிற பரமசிவஸ்வரூபியான ஸ்ரீ சங்சார்யாளை நமஸ்கரிக்கிறேன்.

யகாலமாகும். அநேக வருஷ காலமாக ஸ்ரீ ஸ்வாமிகளவர்களையும் அவர்களுடைய திவ்யமஹிமைகளையும் பலமுறை கேட்டு நேரில் அவர்கள் விஜயம் செய்து இருக்கும் இடம் சென்று தர்சித்து அனுக்கிரகப் பிரஸாதத்தைப் பெரும் பாக்கியம் நமக்குக்கிட்டவில்லையே என்று மிகவும் கவலையுடனிருந்த இந்தப் பிராந்தியங்களிலுள்ள பல ஜனங்களின் பூர்வ புண்ணியங்களால் இதர கிராமங்களிலுள்ள பல ஜனங்களால் எங்கள் கிராமத்துக்கு விஜயம் செய்து அங்கு இந்த பூஜாமஹோத்ஸவத்தை நடத்தி எங்களை தன்யர்களாகச் செய்யவேண்டுமெனப் பிரார்த்திக்கப்பட்டும் அவர்களுக்கு கிடைக்காமல் இந்த கிராமததிற்கு ஸ்ரீ குருசரணுளுடைய விஜயமும் சாதுர்மாஸ்ய மஹாபூஜா ஸங்கற்பமும் பிறகும் இரண்டு மாதகாலம் வரை இந்த ஊரிலேயே ஸ்ரீ சந்திரமௌளீசுவராராதனமும் நேர்ந்த விஷயத்தில் இங்குள்ள மஹாஜனங்களும் மற்றும் வெளியூரிலிருந்து வரும் ஜனங்களும் ஆனந்தக் கடலில்அமிழ்ந்து ஸ்ரீஆசார்யாளுடைய அனுக்கிரஹத்தாலும் ஸ்ரீசந்திரமௌளீசுவர ஸேவையாலும் ஜன்மஸாபல்யத்தையும் அடைகிறார்கள்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் காட்டுமன்னார்
கோவிலில் வியாஸ பூஜைக்காக விஜயம்
செய்திருந்த பொழுது பக்தி புரஸ்ஸரமாய்
ஸமர்ப்பிக்கப்பட்ட

நல்வரவு பத்திரிகை.

संसेव्यं द्रुहिणादिदेवनिकरैः श्रीवीरनारायणं
त्रिल्वारण्यनिवासिनं च गिरिशं संपूजनायागतम् ।
लोकत्राणपरायणं नृवपुषं लोकत्रयाधीश्वरं
दृष्ट्वा लोकगुरुं नतिर्वितनुते ह्येतत्पुरस्थो जनः ॥१॥

பிர்ம்மாதி தேவர்களால் பூஜிக்கப்பட்டு, வீரநாராயணன் என்று இவ்வூரில் அர்ச்சாரூபியாய் விளங்கும் விஷ்ணுவையும், பில்வாரண்ய மெனும் இதற்கடுத்த வடபாகத்தில் (உடையார்குடி) லிங்கரூபியாய் பிரகாசிக்கும் பரமேசுவரனையும், அர்ச்சிப்பதற்கு மனுஷ்யாகாரமாய் வந்தவரும், மூவுலகையும் காக்கும் விரதம் பூண்டவருமான, லோக குருவைக்கண்டு இந்நகரிலுள்ள எல்லா மனிதரும் வணங்குகின்றனர்.

यदीयं हृत्पद्मं निगमवचनान्तैकनिरतं
गिरामप्यासारो भवजलधिसन्तारणतरिः ।
सुगात्रंचान्येषामघनिरसने बद्धकुतुकं
प्रणौम्यत्र प्राप्तं गुरुवरमहं शाङ्करमिमम् ॥२॥

வேதாந்த விசாரத்திலேயே ஆழ்ந்த மனதுள்ளவரும் ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றும் கப்பல் போன்ற நாவன்மையுள்ளவரும், இதரர்படும் கஷ்டத்தை ச்சகியா, யாக்கையுள்ளவருமான, இங்கு வந்து விஜயம் செய்யும் ஸ்ரீ சங்கரகுரு சிரேஷ்டரை நான் வணங்குகிறேன்.

यो हत्वा भुवि तानधर्मनिवहान संवर्धितान्सर्वतो
लोकान्पालयितुं कृतोद्यमतमः क्षेत्राटनव्याजतः ।
क्षेत्रेऽस्मिन्मुनिपूजिते च महिते दैवात्समभ्यागतं
तं वन्दे रजताचलाग्रनिलयं श्रीशङ्करं देशिकम् ॥३॥

துர்மதங்களால் உலகம் சீர்கெட்டிருந்த பொழுது ஆதிசங்கரர் அவதரித்தது போல், இப்பொழுது ஆங்காங்கு தர்மம் குன்றி அதர்மம் பரவியிருந்ததை ஒழிக்கவேண்டி, க்ஷேத்திராடனம் என்றும் அபதேசத்தால் தர்மத்தை நிலையுறச் செய்துகொண்டு மதங்க மஹர்ஷியால் தவம் செய்யப்பட்ட இந்து நகரத்துக்கு அதிர்ஷ்டவசத்தால் ஸாந்நித்தியம் செய்கிற பரமசிவஸ்வரூபியான ஸ்ரீ சங்கராசார்யாளை நமஸ்கரிக்கிறேன்.

बिल्वारण्ये सुकृतसुलभे नाकिभिस्तूयमाने
योऽनन्तेन प्रथितफणिना पूजितः स्वात्मलाभात् ।
धन्यान्कर्तुं निखिलमनुजान सोयमायाति देवः
काले तिष्ये परमगुरुराट् रूपतः कुम्भघोणात् ॥४॥

தவப்பயனால் கிட்டக்கூடிய பில்வாரண்யத்தில், அஷ்டநாகங்களில் முதன்மையான அனந்தன், தான் அடைந்த பயனால் கிருதயுகத்தில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து அனந்தேச்வரன் எனும் திருநாமம் சூட்டினன். அங்கு பரமசிவன், ஸௌந்தர்ய நாயகி என்கிற தன் நாயகியுடன், இன்னும் விளங்கி வருகிறார். அந்த அனந்தேச்வரனே இக்கலியுகத்தில், ஆசார்ய ரூபமாக கும்பகோணத்திலிருந்து ஸகல ஜீவன்களையும் கிருதார்த்தம் செய்விக்க வருகிறார்.

कैलासे कलशार्णवे च वसतो गौरीशनारायणौ
तौ देवौ सुकरौ न सेवितुमिति ग्लानिश्च माभून्नृणाम् ।
कैलासाधिपरूपभाग्धृततपाः हस्ते वहन्वामनं
लोकाचार्यदिवाकरो विजयते सर्वैः सदा सेव्यताम् ॥५॥

கைலாயங்கிரியிலும், பாற்கடலிலும் முறையே வஸிக்கிற ஹரனையும், ஹரியையும் காணமுடியவில்லையெனும் கவலை வேண்டாம். சரீரத்தில் சந்திரசூடன் வேடமும் வாக்கிலேவேத வேதாந்தமும் கையில் வாமனனும் (தண்டம்) தரித்து, மும்மூர்த்தி ரூபமான ஆசார்யக் கதிரவன் உதயமாகிறான். எல்லோரும் ஸேவிப்போம்.

मन्युक्षेत्रमिदं कदा रचयति क्षेत्रोत्तमं पूजनात्
त्र्यक्षो मानुषविग्रहश्चिरमिति क्रान्तं मनः कैरवम् ।
मर्त्यानां स्वकरैर्विकासितुमयं सोमोऽभ्युदेति प्रभुः
स्वाषाढ्यां शरदि क्षये रविदिने श्रीव्यासपूजापरः ॥६॥

தற்போதிய ஆசார்ய ரூபியான முக்கண்ணன். இவ்வூரில் ஸ்ரீ சந்திரமௌளீச்வரரை எப்பொழுது வந்து ஆராதித்து இந்த க்ஷேத்திரத்தைப் புகழ்பெற்றதாகச் செய்வாரோ? என்று வாடியிருந்த

மனிதர்களின் மனஸ்ஸாகிற அல்லியை தன் கரங்களால் (தேஜஸ்ஸால்) மலரச்செய்விப்பதற்காக நாளது வரு ஆஷாட பூர்ணிமையில் வியாஸ பூஜைக்காகத் தானாகவே உண்டாகிற ஆசார்ய சந்திரன் உதித்து வருகிறார்.

अज्ञानात्कलुषीकृतां रसगुणालङ्कारहीनामिमां
मालां सूक्तिकृतां गुरोश्चरणयोः सप्रेमसंप्रापिताम् ।
दोषान्वीक्ष्य ततो निगूह्य गुरुराट् हंसो यथा नीरतः
क्षीरं चूषति तद्वदत्र परमो हंसोऽपि कुर्याच्छिवम् ॥७॥

அறிவின்மையால், ரஸம், குணம், அலங்காரம், முதலானசிறப்பில்லாமல் சுவையிழந்த சொல்லால் தொடுத்த இப்பாமாலையை கேவலம் பக்தியினால் மாத்திரம் குருசரணங்களில் சூட்டப்பட்டது. அன்னபக்ஷி நீரிலிருந்து பாலைப் பிரித்துப் பருகுவது போல், பரமஹம்ஸரான பரமாசாரியார் இதிலுள்ள குணத்தை கிரஹித்து எல்லோருக்கும் மங்களத்தைச் செய்யட்டும்.

इति श्रीजगद्गुरु चरणारविन्दपरमाणुः,

वि. उमामहेश्वरशास्त्री.

வி. உமாமகேச்வர சாஸ்திரீ.

பகவத்கீதை.

ஆரியர்களே, நாம் அனாதிகாலம் தொட்டுப் பரம நிச்சிரேயஸமடையவேண்டுமென்று அநேக நற்காரியங்கள் செய்து வருவதில் பகவத்கீதா பாராயணத்தையே பரம முக்கியமாய்க் கொண்டிருக்கிறோம். கீதா என்றால் பாடப்பெற்றதென்று அர்த்தம். பகவத்கீதா என்றதனால் பகவானால் பாடப்பெற்றதென்றாயிற்று. பகவானால் சொல்லப்பட்டது. भगवत्प्रोक्ता என்று சொல்லாமல் கீதா என்றதன் கருத்து ஒன்று. இரண்டிற்கும் ஸாமான்யமாய்ப் பொருள் ஒன்றேயாயினும், கீதா என்பது விசேஷத்தைக் காட்

டும். அதாவது ஸாமான்யமாய் உலகில் பாட்டு என்றால் எவ்வித வியாகுல மனமுள்ளவனாயினும் அந்த நேரத்தில் துக்கத்தை மறந்து ஆனந்த மயமாய் ஈடுபட்டுப் பாட்டில் வசமடைகிறான். அழும் குழந்தையைத் தொட்டிலிலிட்டுப் பாட்டால் உறங்கவைக்கிறாள். அதிகம் எதற்கு

शिशुर्वेत्ति पशुर्वेत्ति वेत्ति गानरसं फणी ।

கானத்தின் ரஸத்தைச் சிசுவும் பசுவும் அறவும் அறிகிறதென்கிறார். இதைப் பட்டி என்கிற கவி விசித்திரமாய்

दत्तावधानं मधुलेहिगीतौ प्रशान्तचेष्टं हरिणं जिघांसुः ।
आकर्णयन्नुत्सुकहंसनादान् लक्ष्ये समाधिं न दधे मृगावित् ॥

மானுக்குக் கானரஸத்தில் அதிகப் பிரீதியிருப்பதால் காட்டில் அழகிய தாமரைத் தடாகத்தில் ஒலியுடன் பாடும் வண்டுகளின் பாட்டைக் கேட்டுக்கொண்டு அசைவற்று நிற்பதைப் பார்க்க வேடன், அதை அடிக்க மனம் கொண்டவனாய் ஓடி அங்கு அழகாய்ச் சப்தம் செய்து கொண்டிருக்கும் அன்னத்தின் தொனியைக்கேட்டு ஈடுபட்டுத் தான் வந்த காரியம் மறந்து நின்றானென்கிறார். ஆகவே கானம் யாவரையும் பாவசமாக்குமென்பதை விவாதமின்றி ஏற்றுக்கொள்ளலாம். இங்கும் இது பகவானால் கானம் செய்யப்பட்டது என்று சொன்னதனால் சோக மோகத்தால் முழுமையும் மனம் கலங்கி யுத்தத்தில் முன் வந்து நின்றவன் தன் காரியம் இன்னதென்றறியாதவனாய் அதைக் கைவிட்டதுமின்றிப் பிச்சை எடுக்கப் போகிறேனென்று தன் ஜாதிக்குரியதல்லாத தர்மத்தையும்கைக்கொள்ள ஓடும்போது ஏற்பட்ட இதைக் கேட்டவுடன் வேறெவ்விதத்தாலும் விலக்க முடியாத அத்தகைய சேகமோகம் நிமிஷம் விலகவே

स्थितोऽस्मि गतसंदेहः करिष्ये वचनं तव ।
नष्टो मोहःस्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाच्युत ॥

என்று அர்ஜுனன் சொன்னான். இப்போது கீதையை அர்த்தத்தை அறிந்து பாராயணம் செய்பவரது மனதை இது கவர்வது

போல் வேறொன்றுமில்லை யென்பதையும் காண்கிறோம். ஆகவே **भगवद्गीता** என்று சொன்னதுதான் சரி **भगवत्प्रोक्ता** என்பது ஒட்டாது. ஆனால், அனுகீதா, அவதூதகீதா, உத்தர கீதா, வேணு கீதா, சிவகீதா, ஹம்ஸகீதா, சிவராமகீதா, பிக்ஷுகீதா பிராமண கீதா, பாண்டவகீதா, தேவீகீதா, குருகீதா, கோபிகாகீதா, கர்ப்ப கீதா, ப்ரமரகீதா, ராமகீதா என்று பல கீதைகள் உலகிலிருந்த போதிலும் இதனது மகிமையை மட்டிலும் ஸாமான்ய ஜனங்களும் அறிந்திருக்கின்றனர். மற்றவைகளின் மகிமை இதனுற் குறையாது. ஆயினும் இதன் பிரஸித்திபோல் மற்றவைகளுக் கில்லை. மற்றவைகளின் பெயரைக் கூட அறியாத பலர் இருக் கின்றனர்.

இங்கு நியாயமாய் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித் ததால் இதை கிருஷ்ணன் கீதா என்று சொல்லலாம். அல்லது அர்ஜுனனுக்காகப் பிரவர்த்தித்ததால் அர்ஜுன கீதா என்ருவது சொல்லிவிடலாம். இரண்டுமின்றி பகவத் கீதாவென்று சொன்னதற்குத் தாத்பர்யம் ஒன்றிருக்கவேண்டும். அதாவது அங்கு கிருஷ்ணன் தானுக ஒன்றும் சொல்லவில்லை. மற்று பரமாத்மாவின் ஆவேசத்துடனேயே உபநிஷத் ரகஸ்யத்தை வெளியிட்டார். ஆனது பற்றியே நான் சொல்வதில் கிருஷ்ணன் சொல்தானே என்று அலக்ஷ்யம் கொள்வானே என்று கொண்டு விசுவரூபத்தையும் காண்பித்தார். அதைப் பார்த்து நடுங்கின அர்ஜுனனும் கிருஷ்ணன் மஹிமையை யறியாது நான் யாதவர் தோழர்வென்றெல்லாம் அலக்ஷ்யமாய்க் கூப்பிட்டு விட்டேன் அதை மன்னித்தருளவேண்டும் என்று கேட்டான். ஆகவே இதற்கு பகவத்கீதை என்ற பெயர்தான் தகும். கிருஷ்ணுல் சொல்லப்படாததால் கிருஷ்ண கீதை என்றபெயர் ஏற்படவில்லை என்பது நியாயம். அது கொண்டே இதைச் சைவ வைஷ்ணவாதி பேதமின்றி யாவரும் தமது தியானமூர்த்தியான பகவானுற் கூறப்பட்டதென்று ஆனந்தம் கொள்கின்றனர். இனி இத்தகைய பகவத் கீதையில் நான் விசாரிக்க இறங்கிய விஷயம் இதல்ல. அதை இனிக் கூறுகின்றேன்.

இந்த பகவத்கீதை பகவானுன கிருஷ்ணுல் அர்ஜுனனுக்கு யுத்தமத்தியில் உபதேசிக்கப்பட்டதாயும் வேறொருவரா

னும் பார்க்க முடியவில்லையென்றும் வியாஸரது அனுக்கிரஹத்தால் நான் அப்படியே அறிந்தேன். கிருஷ்ணனும் அர்ஜுனனும் இவ்விதம் அற்புதமாய் விவாதம் செய்து கொண்டனர் என்று ஸஞ்ஜயன் திருதராஷ்டிரனிடத்தில் கூறினர். இங்கு ஏற்படும் சங்கை இது. கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு இந்த கீதையிலுள்ள சுலோகங்களைஇப்படியேஉபதேசித்தாரா? அல்லது இந்த சுலோகக்கருத்துள்ள விஷயத்தை உபதேசித்தாரா? பிறகு பாரதமியற்றிய வியாஸாசார்யர் சுலோகமாய்ச் சேர்த்தாரா வென்பனவே. இங்கு முதலில் ஏற்படுவது சுலோகத்தையே கிருஷ்ண பகவான் உபதேசித்தனர் என்றுதான் சொல்லவேண்டி வருகிறது. ஏனெனில் கீதாத்யான சுலோகம்.

पार्थाय प्रतिबोधितां भगवता नारायणेन स्वयं
व्यासेन ग्रथितां पुराणमुनिना मध्ये महाभारतम् ।

பகவானுன நாராயணனுல் பார்த்தனுக்கு வெளியிடப்பட்டதும் புராண முனிவரான வியாஸரால் பாரதத்தின் நடுவில் அப்படியே இணைக்கப் பெற்றதும் என்றதனுல் சுலோக ரூபமாகவே உபதேசித்தாரென்றேற்படுகிறது. மற்றும்

गीता सुगीता कर्तव्या किमन्यैश्शास्त्रविस्तरैः ।
या स्वयं पद्मनाभस्य मुखपद्माद्विनिस्सृता ॥

என்று கீதாமான்மிய வசனமும் கூறுகின்றது. ஆகவே கீதா சுலோகமே பகவானுல் உபதேசிக்கப்பட்டதென்பதில் ஸந்தேகமில்லை யென்கின்றனர்.

(தொடரும்.)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.